95670

OL/2025(2026)/22-T-I,II

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

**22 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

| | |
|---|---|
| දෙමළ භාෂාව හා සාහිත්‍යය I, II<br>தமிழ் மொழியும் இலக்கியமும் I, II<br>Tamil Language and Literature I, II | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

● **தடித்த எழுத்தில்** உள்ள சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**1.** 'வெம் பணிக் கொடியோன்' - இங்கு **பணி** என்பது
(1) சேவை (2) ஆபரணம் (3) பாம்பு (4) தாழ்ச்சி

**2.** 'மறையென லறியா மாயமி லாயம்' - இங்கு **மறை** என்பது
(1) வேதம் (2) அடையாளம் (3) இரகசியம் (4) குறியீடு

**3.** 'பெண்களுக்குத் தம்பதியே பெருந்தெய்வம் என்பர் சிலர்' - இங்கு **பதி** என்பது
(1) இடம் (2) கோவில் (3) நாற்று (4) கணவன்

**4.** 'ஒரு இணக்கம் ஏற்பட்டது' - இங்கு **இணக்கம்** என்பதன் **எதிர்க்கருத்து**
(1) கலக்கம் (2) பிணக்கம் (3) சுணக்கம் (4) விலக்கு

**5.** 'வேந்தரை இழித்து மேலேறினான்' - இங்கு **இழித்து** என்பதன் **எதிர்க்கருத்து**
(1) தாழ்த்தி (2) உயர்த்தி (3) ஏளனம்செய்து (4) வீழ்த்தி

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

**6.** குறித்த சில விலங்கு, தாவரம் ஆகிய இரண்டுக்கும் உரியதாக வழங்கிவரும் இளமைப் பெயர்
(1) குஞ்சு (2) பறள் (3) பிள்ளை (4) குருளை

**7.** Census என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராக, தமிழில் வழங்கும் கலைச்சொல்
(1) தணிக்கை (2) தொகைமதிப்பு (3) பெறுமதி (4) மதிப்பீடு

**8.** 'இலட்சியம் இல்லாத மனிதன் மனிதனல்ல' - இங்கு 'இலட்சியம்' என்பதற்கு நிகரான பிறிதொரு சொல்
(1) கருதுகோள் (2) முனைப்பு
(3) ஈடுபாடு (4) குறிக்கோள்

**9.** 'அது இப்படிக் காலை வாரியும் எனக்குப் புத்தி வரவில்லை.' - காலை வாருதல் என்ற மரபுத் தொடரால் உணர்த்தப்படுவது
(1) துரோகம் செய்தல் (2) அனுசரணையாக இருத்தல்
(3) எதிர்ப்புக் காட்டுதல் (4) இடைஞ்சல் செய்தல்

[பக். 2 ஐப் பார்க்க

10. ஏமாற்று வேலைகளைக் குறிப்பதற்குப் பயன்படும் இணைமொழி
(1) தில்லுமுல்லு (2) இடக்குமுடக்கு (3) இசகுபிசகு (4) சூதுவாது

11. ஏதேனும் ஒரு விடயம் மனதிலே இலகுவாகவும் நிலையாகவும் பதிந்துவிடுவதை உணர்த்துவதற்கு மிகப் பொருத்தமான உவமைத் தொடர்
(1) பசுமரத்தாணிபோல (2) கல்மேல் எழுத்துப்போல
(3) நீர்மேல் எழுத்துப்போல (4) ஒட்டியும் ஆம்பலும்போல

12. 'உன்னிப்பாக அவவைப் பார்க்கத் தொடங்கினேன்.' இங்கு 'உன்னிப்பாக' என்பது
(1) அவதானமாக (2) தெளிவாக (3) நெருக்கமாக (4) சிறப்பாக

13. 'வித்துவான் பட்டம் பெற்ற ஒரு நண்பரோடு படையெடுத்தேன்.' இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு உணர்த்தும் பொருள்
(1) கருவி (2) கருத்தா (3) உடனிகழ்ச்சி (4) செயப்படுபொருள்

14. 'தந்தையின் பிரிவில் விதிர்த்துப் போய்விட்டார்கள்' - இங்கு 'விதிர்த்தல்' என்பது
(1) நடுக்கம் (2) கவலை (3) பயம் (4) ஏக்கம்

15. 'இந்த பக்தி இலக்கியம் உருவாகுவதற்கு நம் அகத்திணை இலக்கியம் ஒருவாறு உறுதுணையாக இருந்திருத்தல் வேண்டும்.' அகத்திணை இலக்கியம் என்பது
(1) சங்க இலக்கியம் (2) சிற்றிலக்கியம்
(3) காதல் இலக்கியம் (4) காவிய இலக்கியம்

16. 'ஏர் தலைக்க வேணும் தம்பிரானே' - இங்கு 'ஏர்' என்பதால் உணர்த்தப்படுவது
(1) கலப்பை (2) கலப்பையின் ஓர் உறுப்பு
(3) உழுதல் (4) வேளாண்மை

17. முழுப் பொருளையும் ஒருவர் தனித்து அனுபவித்தல்
(1) முதுசொம் (2) ஆதனம் (3) நிவந்தம் (4) ஏகபோகம்

18. 'ஆனந்தத்தில் என் கண்ணில் நீர் தளும்பி நின்றது' - இங்கு 'தளும்புதல்' என்றால்
(1) துளிர்த்தல் (2) நிறைதல் (3) வழிதல் (4) ஊறுதல்

19. 'சரசரென பால் விழும்' - இங்கு சரசர என்பது
(1) இணைமொழி (2) இரட்டைக் கிழவி
(3) அடுக்குத் தொடர் (4) அடுக்கிடுக்குத் தொடர்

20. தலைவிதியை மாற்ற முடியாது என்ற கருத்தை வெளிப்படுத்தும் பழமொழி
(1) அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
(2) அஞ்சிலே வளையாதது ஐம்பதில் வளையுமா?
(3) அடாது செய்தவன் படாது படுவான்.
(4) அன்று எழுதியவன் அழித்து எழுதுவானா?

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான** விடையைத் தெரிவுசெய்க.

21. ககரம் 'g' என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கும் சொல்
(1) பக்கம் (2) காகம் (3) சங்கு (4) கடல்

22. கிரந்த எழுத்து இடம்பெற்ற சொல்
(1) ஐயர் (2) ஜனகன் (3) ஔவை (4) அஃறிணை

23. இயல்பு புணர்ச்சி இடம்பெற்ற சொல்
(1) கையால் (2) பல்லால் (3) மனத்தால் (4) காலால்

24. தொழிற்பெயர் இடம்பெற்ற வாக்கியம்
(1) ஒழுங்காகப் படிப்பது எம் கடமை.
(2) ஒழுங்காகப் படித்தவன் முன்னேறுவான்.
(3) படித்தவர்களை உலகம் மதிக்கும்.
(4) படியாதவர்களை உலகம் மதிப்பதில்லை.

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**25.** செயப்பாட்டுவினை இடம்பெற்ற வாக்கியம்
(1) அவன் ஒருபோதும் பொய் சொல்லமாட்டான்.
(2) நல்லவர்கள் எப்போதும் உண்மையே பேசுவார்கள்.
(3) உண்மை பேசுபவர்கள் போற்றப்படுவார்கள்.
(4) பொய் பேசுபவர்களை உலகம் போற்றாது.

**26.** பின்வருவனவற்றுள் இருபெயரொட்டுப் பண்புத்தொகை
(1) வெண்மதி (2) இன்சொல் (3) சாரைப்பாம்பு (4) உள்ளத்தாமரை

**27.** 'அனர்த்தத்தில் அகப்பட்டவர்களுக்கு உதவுக.' இங்கு 'உதவுக' என்பது
(1) ஏவல் வினை (2) வியங்கோள் வினை
(3) முன்னிலை வினை (4) எச்ச வினை

**28.** அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி
(1) அகவல், அத்திப்பூ, அச்சம், அனிச்சம் (2) கிஞ்சுகம், கிரகம், கிழக்கு, கிணறு
(3) காந்தாரம், காத்திருப்பு, காவடி, காவோலை (4) ஆகடியம், ஆரவாரம், ஆவாரம்பூ, ஆறுதல்

- **பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

**29.** (1) ஆண்பால் : மாணவன், வியாபாரி, நடந்தான்
(2) பெண்பால் : மாணவி, தங்கை, தாய்
(3) பலர்பால் : நண்பர்கள், மங்கையர்கள், ஊரவர்
(4) ஒன்றன்பால் : அரசாங்கம், மாமரம், சிங்கம்

**30.** (1) குற்றியலுகரம் : கொக்கு, வீடு, குரங்கு
(2) உடனிலை மெய்ம்மயக்கம் : பக்கம், பச்சை, அப்பம்
(3) ஏவல் வினை : வாருங்கள், தொடாதே, தாண்டு
(4) வேற்றுமைத் தொகை : வான்மதி, என் நண்பன், செய்நன்றி

- புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான** சொல்லைத் தெரிவுசெய்க.

**31.** இயற்கை அனர்த்தத்தினால் வீடுகளை இழந்தவர்களுக்கு உரிய ………………… வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.
(1) இழப்பீடு (2) காப்பீடு (3) முதலீடு (4) மாற்றீடு

**32.** பரீட்சை மண்டபத்தில் ………………… கடமையில் ஈடுபட்டிருந்தனர்.
(1) பரீட்சகர்கள் (2) பரீட்சார்த்திகள்
(3) மேற்பார்வையாளர்கள் (4) அதிபர்கள்

**33.** கவிஞர், தான் வெளியிடவுள்ள நூலில் இணைத்துக் கொள்வதற்காகத் தன்னைப் பற்றிய சிறப்புக்களை எடுத்துரைப்பதான ………………… ஒன்றைத் தனது ஆசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.
(1) அணிந்துரை (2) விமர்சனவுரை (3) வெளியீட்டுரை (4) நயவுரை

**34.** கவிஞர்கள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள் என்று அனைத்துத் தரப்பையும் சார்ந்த ………………… ஒன்றுகூடி சமகால இலக்கியப்போக்கு தொடர்பாகக் கலந்துரையாடினர்.
(1) அறிஞர்கள் (2) புலமையாளர்கள்
(3) ஆராய்ச்சியாளர்கள் (4) இலக்கியவாதிகள்

**35.** வெளியில் பேசமுடியாத விடயங்களையும் பாராளுமன்றத்திற்குள் பேசுவதற்கு, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு …………………..... உள்ளது.
(1) முன்னுரிமை (2) ஜனநாயகவுரிமை
(3) சிறப்புரிமை (4) பேச்சுரிமை

**36.** ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோருடன் இணைந்து அதிபர் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாக நிலைத்த பயன்தரும் திட்டங்கள் பலவற்றைத் …………………
(1) தீட்டினார் (2) தீட்டினர் (3) தீட்டினார்கள் (4) தீட்டுவர்

[பக். 4 ஐப் பார்க்க

- கீழே தரப்பட்டுள்ள கவிதையை அடிப்படையாகக் கொண்டு **37** தொடக்கம் **39** வரையான வினாக்களுக்கு விடை தருக.

மங்கிவரும் பகற்பொழுது மடல் விரித்த
    தாழை எலாம் மணம் பரப்ப
தங்கநிற மணல் மேட்டில் தனியாக நான் இருந்தேன்.
    தமிழும் வந்தாள்!
பொங்கி எழும் கவியுணர்வுப் போதைக்கு
    விசை ஊட்டப் புது நிலாவும்
எங்கிருந்தோ அடிவானில் முளைத்து அங்கே
    ஆழியிடை அமுதம் பெய்தாள்!

**37.** இக் கவிதையில் விபரிக்கப் பெறுவது
(1) காலைக்காட்சி (2) மாலைக்காட்சி
(3) சந்திரோதயம் (4) பகற்பொழுது

**38.** கவிஞர் தனித்திருந்த மணல்மேடு எங்கே இருந்தது?
(1) கடற்கரையில் (2) குளக்கரையில்
(3) ஆற்றங்கரையில் (4) பாலைநிலத்தில்

**39.** தமிழ், கவியுணர்வு, நிலவொளி ஆகியவற்றுக்கு முன்வைக்கப்படும் உருவகங்கள் முறையே
(1) போதை, பெண், அமுதம் (2) அமுதம், பெண், போதை
(3) பெண், போதை, அமுதம் (4) போதை, அமுதம், பெண்

**40.** கீழே, சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தினால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

அ - ஆனால் அது சரியான கருத்து அல்ல.

ஆ - ஏனெனில் அவனுடைய கடமை நாட்டின் வருமானத்தை அனுபவிப்பதோ மக்களை அடக்கி ஆள்வதோ அல்ல.

இ - அரசன் என்பவன் நாட்டின் உரிமையாளன் என்றே நாம் பொதுவாகக் கருதுகிறோம்.

ஈ - உண்மையில் அரசன் என்பவன் நாட்டின் பாதுகாவலனே.

உ - மாறாக நாட்டு வருமானத்தை வளர்ப்பதும் தக்கபடி செலவு செய்வதும் அதன்மூலம் மக்களை வளமாக வாழச் செய்வதுமே அவனுடைய கடமை.

(1) ஈ, அ, ஆ, உ, இ (2) இ, அ, ஈ, ஆ, உ
(3) இ, உ, ஆ, ஈ, அ (4) ஈ, ஆ, இ, அ, உ

* *

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**22 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

| | |
|---|---|
| දෙමළ භාෂාව හා සාහිත්‍යය | I, II |
| தமிழ் மொழியும் இலக்கியமும் | I, II |
| Tamil Language and Literature | I, II |

# தமிழ் மொழியும் இலக்கியமும் II

அறிவுறுத்தல்கள் :

- ✻ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- ✻ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வரும் தொடரைப் பிரித்தெழுதுக.
'தனைக்கொண் டெறியும்'

(ii) 'கேண்மை செய்து இன்புற்றனெம்.'
இந்த வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக.

(iii) பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்துவழக்கில் தருக.
இப்ப எனக்கு பசிக்குது.

(iv) பின்வரும் வாக்கியத்தை பொருத்தமான நிறுத்தக்குறிகளை இட்டு மீண்டும் எழுதுக.
சினிமா ஒரு தொழில்நுட்பக்கலை பல கலைகளின் சங்கமம்

(v) - பெரும் புயல் வருமென்று எச்சரிக்கப்பட்டது.
- அப்படி எதுவும் நடக்கவில்லை.

மேற்படி இரண்டு வாக்கியங்களையும் இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்லைக் குறிப்பிடுக.

(vi) 'நடு' என்ற சொல் பெயரடையாகவும் வினைமுற்றாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வோர் வாக்கியம் எழுதுக.

(vii) பின்வரும் சொல் ஒவ்வொன்றிலும் காணப்படும் எழுத்துப் பிழையை இனங்கண்டு, திருத்தி சரியான முறையில் எழுதுக.
வர்த்தமாணி, காலணியம்

(viii) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகியவற்றின் பொதுப் பெயரைக் குறிப்பிடுக.

(ix) கடிதம், கட்டுரை என்ற சொற்களுக்கு நிகராகத் தமிழில் வழங்கும் ஒவ்வொரு சொல்லைத் தருக.

(x) நன்கு கற்பதும் பொருத்தமான ஒரு தொழிலைத் தேடிக்கொள்வதும் நமது முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமானதாகும்.
- இந்த வாக்கியத்தில் உள்ள வழுவை இனங்கண்டு, வழுவற்ற வகையில் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.

(20 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக.

(i) சூழல் மாசுபடுதல் முதலானவை காரணமாக அண்மைக் காலங்களில் இயற்கை அனர்த்தங்கள் உலகளாவிய நிலையில் அடிக்கடி ஏற்படுகின்றன. இலங்கை அதற்கு விதிவிலக்கு அல்ல. இயற்கை அனர்த்தங்கள் ஏற்படாதபடி எவ்வாறு பார்த்துக்கொள்வது, ஏற்பட்டால் அவற்றிலிருந்து எவ்வாறு பாதுகாப்புப் பெறுவது, பாதிப்புகளை எவ்வாறு முகாமை செய்வது என்பவற்றை விளக்குவதான ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ii) இலங்கையின் தேசிய பொருளாதாரம், கடந்த சில ஆண்டுகளில் மோசமான நிலையை எய்தியது. நாடு அதிலிருந்து மீள்வதற்கு சர்வதேச உதவிகளைப் பெறவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானது. அதற்கும் அப்பால் கைத்தொழில் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி நாட்டின் பொருளாதார மீட்சிக்குப் பெரிதும் உதவியது. அந்த வகையில் கைத்தொழில் துறையின் அபிவிருத்தியை வலியுறுத்துவதான ஒரு **மேடைப்பேச்சு.**

(iii) இலங்கையில் பாடசாலை மட்ட பொதுக் கலைத்திட்டத்தில் சமயக்கல்வி பிரதான பாடங்களுள் ஒன்றாக இடம்பெற்றுள்ளது. சமய பாடத்தை அவ்வாறு கொள்வது சிறந்தது என்று கருதும் ஒருவருக்கும் அது தேவையற்றது என்று கருதும் பிறிதொருவருக்கும் இடையிலான ஓர் **உரையாடல்.**

(iv) அவர் இன்று ஒரு பெரும் தொழிலதிபர். ஆனால் முன்பு ஒரு வறிய குடும்பத்துப் பிள்ளை. இலவசக் கல்வி வாய்ப்பினால் பட்டப்படிப்பு வரையில் உயர்வடைய அவரால் முடிந்தது. ஆனால் அதன் பின்னர் சில ஆண்டுகளாக எந்தத் தொழிலும் கிடைக்கவில்லை. அவரோடு கூடப் படித்தவர்கள் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் இணைந்து போராடினார்கள். ஆனால் அவர் தனது வாழ்வாதாரத்தைச் சுயமாகவே ஏற்படுத்திக்கொண்டு முன்னேறினார். அவரது வாழ்க்கைப் போராட்டத்தை விபரிப்பதான ஒரு **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

**3.** பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

நல்ல செயல்களைச் செய்யவேண்டும் என்ற விருப்பம் எல்லோரிடமும் குடிகொண்டிருக்கிறது. இதில் விதிவிலக்கு இல்லை. ஆனால் 'நல்ல செயலுக்கு நானூறு இடைஞ்சல்' என்பதை நினைத்து அந்த விருப்பம் செயலாக உருவாவதில்லை.

சிறிது செயலில் வருகிறது என்று வைத்துக்கொள்வோம். அவ்வாறு வந்தாலும் எடுத்த அந்தச் செயலை தொடர்ந்து செய்து முடிக்க முயலுவதில்லை. சில வேளைகளில் இத்தகைய நல்ல செயல்கள் செய்ய வேண்டுவது தவிர்க்க முடியாததுதானா என்ற சந்தேகம் சிலர் நெஞ்சில் குருத்துவிட்டுக் குடைகிறது. இந்தச் சந்தேகம் அவர்கள் உள்ளத்திலிருந்து எளிதில் அகலுவதில்லை.

அழுக்குப்படிந்த அறிவும், முயற்சியற்ற உள்ளமும் உடைய தெளிவில்லாதவர்களே இவ்வாறு சந்தேகம் நீங்காதவர்களாக இருக்கிறார்கள்.

நல்வினைகளில் முழுமூச்சோடு ஈடுபட்டு நிற்பது ஒன்றுதான் மக்களின் கடமை. அதுவன்றி மக்களின் செயல்கள் பூவில் உதிர்ந்து போகுமா? பிஞ்சில் உதிர்ந்து போகுமா? அல்லது காய்த்துக் கனிதருமா? என்றெல்லாம் பலவாறு நினைத்து, குழப்பிக் குட்டையில் விழுந்து தவிப்பது அழகல்ல.

பிறவியின் கடமை இன்பத்திற்கு ஆதாரமான உணர்வு விளக்கம் பெறுவது. அந்த விளக்கம் நற்செயல்களைத் தொடர்ச்சியாக இடையறாது செய்து கொண்டிருப்பதனாலேயே உருவாகும். வைர மணிக் கல்லைத் தீட்டத் தீட்ட அது ஒளிவிடுவதுபோல் நற்செயல்களில் ஈடுபட ஈடுபட அந்த விளக்கமும் மிகுவது திண்ணம்.

மற்றபடி, மக்கள் விருப்பமெல்லாம் நடைமுறையாக வேண்டுமென்று கட்டாயம் இல்லை. நாம் நினைப்பதெல்லாம் சமுதாய சக்திகளின் சிக்கல் நிறைந்த இயக்கத்திற்குப் பொருந்தியிருக்க முடிவதில்லை. எனவே, விருப்பங்கள் எல்லாம் நிறைவேறும் என்று எதிர்பார்ப்பது அழகல்ல. இது சமுதாய வாழ்வின் படிப்பினை.

(10 புள்ளிகள்)

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**4.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பொதுவாக கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு முதலாகத்தான் தமிழில் வசன நடையிலான நூல்கள் எழுதப்படலாயின. ஏனெனில் அந்த நூற்றாண்டிலேதான் வசன நூல்கள் வளர்வதற்கு வாய்ப்பான அச்சுப் பொறிமுறையைக் கையாளும் உரிமை தமிழ்ச் சமூகத்துக்குக் கிட்டியது. அத்தோடு வசன நடையிலான நூல்களை எழுதி வெளியிடவேண்டிய அத்தியாவசிய தேவையும் அக்காலத்திலே ஏற்பட்டது.

அக்காலத்தில் இந்தியாவைக் கைப்பற்றி ஆண்ட கிழக்கிந்தியக் கம்பனியார், படித்த ஆங்கிலேயர்களை இங்கிலாந்திலிருந்து அழைத்து வந்து இந்தியாவை நிர்வகிக்கும் மேலதிகாரிகளாக நியமித்தனர். அந்த அதிகாரிகள் தாம் பதவி வகிக்கும் பிரதேசங்களில் வழங்கிய மொழியை அறிந்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் அக்காலத்தில் காணப்பட்டது. ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சிமொழியாக அமையாத அந்தக் காலத்தில் இந்திய மொழிகளில் ஒன்றைப் படித்து தேர்ச்சியடைந்த ஆங்கிலேய உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வும் கிடைத்தது. அந்த நிலையில் தமிழ்நாட்டில் உத்தியோகம் பார்த்த ஆங்கிலேயர்கள் தமிழைப் படிப்பதில் ஆர்வம் காட்டினார்கள்.

அதுவரையில் நூல்களை செய்யுள் வடிவிலேயே எழுதிவந்த தமிழறிஞர்கள், செய்யுள்களைப் படிப்பதற்குச் சிரமப்பட்ட ஆங்கிலேய நிர்வாகிகள் இலகுவாகப் படிப்பதற்கு ஏற்ற வகையில் இலக்கண நூல்களைக்கூட வசனத்தில் எழுத முற்பட்டார்கள். வசன நடையில் தமிழ் இலக்கண நூல்களை எழுதுபவர்களுக்கு பரிசு தரப்படும் என்று கிழக்கிந்தியக் கம்பனியால் விடுக்கப்பட்ட அறிவிப்பு, அத்தகைய நூல்கள் வெளிவருவதற்குத் தூண்டுகோலாயிற்று.

(i) தமிழ் வசன நடையிலான நூல்கள் எந்த நூற்றாண்டு முதலாக எழுதப்படலாயின?

(ii) வசன நூல்கள் அந்த நூற்றாண்டு முதல் எழுதப்பட்டமைக்குக் காரணமாய் அமைந்த விடயங்கள் யாவை?

(iii) தமிழ் நாட்டில் நிர்வாகிகளாகக் கடமையாற்றிய ஆங்கிலேயர்களைத் தமிழ் படிக்கும்படி நிர்ப்பந்தித்த காரணி யாது?

(iv) தமிழ் படிப்பதில் அவர்களை ஆர்வம் காட்டும்படி செய்தது எது?

(v) தமிழறிஞர்கள் இலக்கண நூல்களை வசன நடையில் எழுதுவதற்குத் தூண்டிய விடயம் யாது?

(10 புள்ளிகள்)

**5.** சுதந்திரபுரம் ஊரில் உள்ள 'பாரதி மன்றம்' என்னும் தொண்டு நிறுவனத்தின் செயலாளரான த. கலைச்செல்வியாக உம்மைக் கருதிக்கொண்டு, உமது ஊரைச் சார்ந்த ஏழைப் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தையற் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு, மகளிர் விவகார அமைச்சின் செயலாளருக்கு **100** சொற்களில் **கடிதம்** ஒன்று எழுதுக.

**அல்லது**

'பசுமை இயக்கம்' என்னும் அமைப்பால் மக்கள் மத்தியில் நாட்டின் நீர்வளத்தைப் பேணுதல், மேம்படுத்தல் முதலான விடயங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு வெளியிடுவதற்குப் பொருத்தமான **துண்டுப்பிரசுரம்** ஒன்றினை **100** சொற்களில் தயாரிக்குக. (15 புள்ளிகள்)

* * *

95400

OL/2025(2026)/22-T-III

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

22 T III

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය III
தமிழ் மொழியும் இலக்கியமும் III
Tamil Language and Literature III

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

**அறிவுறுத்தல்கள் :**

* அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை தருக.

(i) "நித்திலப் புன்னகை"

(அ) 'நித்திலம்' என்பது எதைக் குறிக்கிறது?

(ஆ) இங்கு பயின்றுள்ள அணி யாது?

(ii) "கொங்கர்க்கு அமராபதியளித்த கோவே"

(அ) இங்கு 'கொங்கர்' எனப்படுவோர் யாவர்?

(ஆ) அமராபதியளித்தல் என்பதன் மூலம் உணர்த்தப்படும் குறிப்புப் பொருள் யாது?

(iii) "என்னுடைய சாதகத்தில் 'கம்பியூட்டர்' தத்து
இருப்பதாக சுதுமலைச் சாத்திரியார் சொன்னது..."

(அ) 'தத்து' என்றால் என்ன?

(ஆ) இங்கு 'சாதகம்' என்பது எதைக் குறிக்கிறது?

(iv) "கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினை இடிப்போம்."

(அ) இது யாருடைய கூற்றாக அமைந்துள்ளது?

(ஆ) இங்கே விவரிக்கப்பெறும் செயற்பாடு யாது?

(v) "கோக்கள் வைகும் முற்றத்தான் முதற்றேவி..."

(அ) கோக்கள் வைகும் முற்றத்தான் யார்?

(ஆ) அவனது முதற்றேவி யார்?

(vi) "காய்ச்சல் மனே. நீ கடக்கி ஓடிப்போய் ஊறல் பக்கட் வாங்கிவா."

(அ) இங்கு இடம்பெறும் 'மனே' என்பதன் திருத்தமான வடிவம் யாது?

(ஆ) 'ஊறல்' என்பது எதைக் குறிக்கிறது?

(vii) "இந்தப் புன்செய்களைவிட்டுப் போக வேண்டியதுதான்."

(அ) இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

(ஆ) 'புன்செய்' என்பது எதனைக் குறிக்கிறது?

[பக். 2 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(viii) "யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்.
எறிந்தவேல் மெய்யதா வால் குழைக்கும் நாய்."

(அ) யானையின் இயல்பு யாது?

(ஆ) நாயின் நற்பண்பு யாது?

(ix) "நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து..."

(அ) 'நெடுநீர்க் குட்டம்' என்றால் என்ன?

(ஆ) இத்தொடரில் இடம்பெற்றுள்ள ஒலிக்குறிப்புச் சொல் யாது?

(x) "கரவு உறையும் மனத்தாதை முனிக்கு
உரைத்த மொழி"

(அ) இங்கு தாதை யார்?

(ஆ) முனி யார்?

(20 புள்ளிகள்)

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து, அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவற் கிருக்க நிழலாகாதே
தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே...

(அ) இங்கு பனை பற்றி எவ்வாறு விபரிக்கப்பட்டுள்ளது?

(ஆ) ஆலம் விதையின் சிறப்பு எவ்வாறு விபரிக்கப்பட்டுள்ளது?

(ii) கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துட் பேதை புகல்.

(அ) இங்கு வள்ளுவரால் ஏளனம் செய்யப்படும் விடயம் யாது?

(ஆ) இங்கு இடம்பெற்றுள்ள அணியை இனங்கண்டு விளக்குக.

(iii) புழுதிப் படுக்கையில்
புதைந்த எம் மக்களைப்
போற்றும் இரங்கற்
புகழ்மொழி இல்லை;
பழுதிலா அவர்க்கோர்
கல்லறை இல்லை
பரிந்தவர் நினைவுநாள்
பகருவார் இல்லை.

(அ) கவிஞர் யார் மீது, எவ்வாறு கரிசனை காட்டுகிறார்?

(ஆ) அவர்களோடு கவிஞருக்குள்ள நெருக்கமான உறவை வெளிப்படுத்தும் பாங்கில் காணப்படும் நயத்தினை விளக்குக.

PAST PAPERS WIKI

[பக். 3 ஐப் பார்க்க

(iv) இப்படியாக சந்தி பிரிக்காத பாடல் போல தலை சுற்றியது விவகாரம். மறுபடியும் நான் அந்தக் கடைக்கு கம்பியூட்டரை கொத்துக்கொத்தாக ஆராய்ச்சி செய்து வித்துவான் பட்டம் பெற்ற ஒரு நண்பரோடு படையெடுத்தேன். நண்பர் கம்பியூட்டருக்கு தலபுராணம் எழுதியவர். விடுவாரா? இப்போது வட்டியும் முதலுமாக அவர்களைப் போட்டு குடைகுடையென்று குடைந்தார். அவர்களுடைய சம்பாஷணை முற்றிலும் ஒரு புதிய பாஷையில் நடைபெற்றது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

(அ) கதைசொல்லிக்கு கம்பியூட்டர் தொடர்பில் பரிச்சயம் இல்லை என்பது உவமை மூலம் வெளிப்படுத்தப்படுவதில் காணத்தகும் நயத்தினை விளக்குக.

(ஆ) அது தொடர்பிலான நண்பரின் நிபுணத்துவத்தை வெளிப்படுத்தும் பாங்கில் காணத்தக்க சிறப்பினை விளக்குக.

(v) பார்ப்பனர், மொழிபெயர்தேயத்தார், யவனர், புலம்பெயர் மக்கள் தமிழ் மக்களோடு இனிதாக வாழ்ந்து வந்தார்கள். இம்மனப்பான்மை ஒரு சில காலங்களில் சமயக் காழ்ப்பால் மாசு அடைந்ததாயினும், அது எக்காலத்திலும் தமிழ் மக்களிடம் வளர்ந்தே வந்துள்ளது. பிற மக்களின் நலத்தைக் கருதும் பண்பு, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்னும் தன்மை இச் சிறப்பை மேலும் வளர்த்தது. இம்மனப்பான்மை வட ஆரியர், கிரேக்கர் போன்றோருடைய பண்டைக் கொள்கைகளுடன் முரண்பட்டேயிருந்தது. பிளேட்டோ, அரிஸ்டோட்டல் போன்றோர் கிரேக்கர் மட்டுமே உயர்ந்தவர்கள் என்றும் பிறமக்களை நாகரிகம் அற்றவர்கள் என்றும் கூறி வந்தனர். வட ஆரியர் இமய மலைக்கும் விந்திய மலைக்கும் இடையேயுள்ள நிலம்தான் புண்ணிய பூமி என்று கருதினர்.

(அ) தமிழ் மக்களின் உயரிய மனப்பான்மை இங்கு எவ்வாறு விளக்கியுரைக்கப்படுகிறது?

(ஆ) அம்மனப்பான்மை பிற சமூகங்களில் இல்லாமை எவ்வாறு உணர்த்தப்பட்டுள்ளது?

(20 புள்ளிகள்)

3. **கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில்,**

(அ) தருமனுடைய சமாதான நாட்டம்

(ஆ) போருக்குத் தூண்டும் கிருஷ்ணனுடைய போக்கு

ஆகியன வெளிப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

**திருக்குறள் பேதமை** அதிகாரத்தில்,

(அ) பேதமையின் வெளிப்பாடுகளாகத் திருவள்ளுவர் முன்வைக்கும் விடயங்கள்

(ஆ) பேதமையின் இழிவை அவர் எடுத்துரைக்கும் பாங்கில் காணத்தகும் நயங்கள்

ஆகியன வெளிப்படுமாற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

4. **நாவலர் எழுந்தார்** என்ற கட்டுரையில்,

(அ) வாதமகாசபையின் வாதத்திறமையும்

(ஆ) அதற்குத் தலைமைதாங்கிய கரோல் விஸ்வநாதபிள்ளையின் சிறப்பும்

கட்டுரையாசிரியரால் விபரிக்கப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

**மூத்தம்மா** என்ற சிறுகதையில்,

(அ) புழங்கு பொருட்கள்

(ஆ) சமுதாய நம்பிக்கைகள்

என்பன கையாளப்பட்டுள்ளவாற்றைத் தெளிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



● **5, 6, 7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

**5.** புறநானூறு **இனி நினைந்து...** எனும் பாடலில்,

(அ) இளமைக்காலம்

(ஆ) முதுமைக்காலம்

ஆகியன உணர்வுபூர்வமாக விபரிக்கப்படுமாற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

**6.** **குற்றாலக் குறவஞ்சிப்** பாடல்களில்,

(அ) விலங்குகளின் நடத்தைகள்

(ஆ) தாவர வளம்

என்பன கையாளப்பட்டுள்ளவாற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

**7.** **சீறியோடாத வருங்கால நதி** என்ற கவிதையில்,

(அ) எழுதத் தெரியாத பையனின் நிலை

(ஆ) அவன்மேல் கவிஞர் கொண்ட பரிவு

ஆகியன வெளிப்படுமாற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

* * *

0003602